# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

| மாவட்டம் : | தேனி | காலம் : | 25/04/2018 | முதல் | 29/04/2017 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 032/ 2018 | வெளியீட்டு நாள் : | 24/04/2018 | | |

| கடந்த கால வானிலை 20/04/2018 முதல் 23/04/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 37-39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26-27 |
| மேக மூட்டம் | 3-5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 37-70 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 10-15 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 23-04-2018 8.30 மணி வரை )

| காரணிகள் | 25-04-2018 | 26-04-2018 | 27-04-2018 | 28-04-2018 | 29-04-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 5 | 6 | 8 | 1 | 1 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 38 | 38 | 38 | 36 | 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 28 | 28 | 28 | 27 | 27 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 75 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 40 | 40 | 40 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 5 | 5 | 5 | 10 | 10 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தெற்கு | தெற்கு |

**குறுஞ்செய்தி**

வரும் 25, 26ம் தேதிகளில் ஒரு சில இடங்களில் லேசான மழையும், 27ம் தேதியன்று மிதமான மழையும் பெய்வதற்கான வாய்ப்பும் 28, 29ம் தேதிகளில் தூரலுக்கான வாய்ப்பும் உள்ளது. வானம் மிதமான மேக மூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 5 முதல் 10 கி.மீ வேகத்தில் தென்கிழக்கு மற்றும் தெற்கு திசைகளில் காற்று வீசக்கூடும்

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மா & ( கால்நடை)**

தற்போது நிலவிவரும் பருவச்சூழ்நிலையில் மா பயிரில் மாவுப்பூச்சியின் தாக்குதல் தென்படக்கூடும். மாவுப்பூச்சிகள் இலைகள் மற்றும் பூங்கொத்துக்களை தாக்குகிறது. இலைகளின் சாறை உறிஞ்சுவதால் இலைகள் காய்ந்து விடுகின்றது. தாக்கப்பட்ட இலைகள் கேப்னோடியம் என்ற பூஞ்சையினால் தாக்கப்பட்டு கருமை நிறமாக மாறி கருகி விடுகிறது. மரத்தைச் சுற்றிலும் உழுது களைகளை அகற்றிவிட வேண்டும். கிரிப்டோலமஸ் மான்ட்ரோசிரி போன்ற இயற்கை எதிரிகளை மரத்திற்கு பத்து வீதம் பயன்படுத்தி மாவுப்பூச்சிகளை அழிக்கலாம். மேலும், ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி மெதில் பாரத்தியான் அல்லது 2.5 மில்லி குளோர்பைரிபாஸ் கலந்து தெளித்து மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

வெயில் காலங்களில், வறண்ட குளம் மற்றும் குட்டைகளில் தேங்கியுள்ள அசுத்தமான தண்ணீரில் உள்ள நத்தைகள், கிருமிகள் மற்றும் புழுக்கள் மூலம் கால்நடைகளை நோய் தாக்கக்கூடும். எனவே விவசாயிகள் தங்கள் கால்நடைகள் தண்ணீர் வற்றியுள்ள குளம் குட்டைளில் தண்ணீர் குடிக்க வைப்பதை தவிர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.